# வெளியுறவு செயலாளர் மற்றும் ஐக்கிய ராஜ்யத்தின் கருவூலத்தலைமையின் அதிபர் இந்தியாவிற்கு (ஜூலை 7-8,2014) வரையிலான கூட்டு விஜயம்

**ஜூலை 05,2014**

ஐக்கிய ராஜ்யத்தின் வெளியுறவு மற்றும் காமன்வெல்த் விவகாரங்களுக்கான மாநில செயலர், திரு வில்லியம் ஹேக் மற்றும் இங்கிலாந்து கருவூலத்தலைவர்  திரு ஜார்ஜ் ஆஸ்போர்ன் ஜூலை 07-08, 2014 ல் இந்தியாவிற்கு ஒரு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொள்ள உள்ளனர்.

பிரிட்டிஷ் வெளியுறவு செயலர், வெளியுறவு அமைச்சர், திருமதி சுஷ்மா ஸ்வராஜ் அவர்களை ஹைதெராபாத் மாளிகையில் 2014 ஜூலை 8 அன்று சந்திப்பார். இரு தரப்பும் பரஸ்பர நலன்கள், இருதரப்பில் உள்ள பிராந்திய மற்றும் சர்வதேச பிரச்சினைகள் பற்றி விவாதிக்க உள்ளனர்.

கருவூலத்தலைவர் நிதி மற்றும் பாதுகாப்பு அமைச்சர் ஸ்ரீ அருண் ஜேட்லியுடன் பொருளாதார, நிதிய உரையாடல் (ஈ எ்ப் டி) நடத்த உள்ளார். இரண்டு அமைச்சர்களும் 8 ஜூலை 2014 அன்று மாண்புமிகு பிரதமர் நரேந்திர மோடியை ஒரு கூட்டாக சந்திக்க உள்ளனர். மேலும் அவர்களின் மும்பை வருகையும் திட்டமிடப்பட்டுள்ளது.

இரண்டு அமைச்சர்களும் மற்ற மூன்று பிரிட்டன் அமைச்சர்கள் கொண்ட ஒரு அதிகாரி தூதுக்குழு அதாவது- திரு கிரேகோரி பார்க்கர் எம்.பி., இந்திய வணிக ஒப்பந்தத்திற்கான அமைச்சர் மற்றும் காலநிலை மாற்றம் மற்றும் எரிசக்திக்கான அமைச்சர்; திரு ஆலிவர் லெட்வின் எம்.பி., அமைச்சரவை அலுவலகத்தில் அரசு கொள்கைக்கான அமைச்சர் மற்றும் திரு ஜோசப் எட்மண்ட் ஜான்சன் எம்.பி., அமைச்சரவை அலுவலக அமைச்சர் ஆகியோர் கொண்டது ஆகும்.

இந்தியா மற்றும் ஐக்கிய ராஜ்யம் இடையிலான 2004 ஆம் ஆண்டு முதலான மூலோபாய கூட்டு பல்வேறு பகுதிகளில் இரண்டு நாடுகளுக்கும் உள்ள உயர் மட்ட பரிமாற்றங்கள் மற்றும் வளர்ந்து வரும் ஒத்துழைப்பை குறிப்பிடுகிறது.

**புது டில்லி,**

**ஜூலை 05,2014**